**கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை**

**கலை கலாசார பீடம்**

**நான்காம் வருட முதலாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு**

**2014/2015 (September 2020)**

**GYS 4133 பிரதேச அபிவிருத்தியும் திட்டமிடலும் (Regional Development and Planning)**

நேரம்: 03 மணித்தியாலங்கள்

எழுத்து தெளிவில்லாதவிடத்து புள்ளிகள் குறைக்கப்படும்

பகுதி I இல் இருந்து இரண்டு வினாக்களையும் பகுதி II இல் இருந்து மூன்று வினாக்களையும் தெரிவு செய்து மொத்தமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை தருக.

---

## பகுதி I

1. அ) பிரதேச அபிவிருத்தி, திட்டமிடல் என்ற இருபதங்களையும் வரைவிலக்கணப்படுத்துக. (06 புள்ளிகள்)

   ஆ) பிரதேசங்களுக்கிடையே வேறுபாடு இடம்பெறுவதற்கான காரணங்களைக் குறிப்பிட்டு, பௌதிக ரீதியாக இவ்வேறுபாடு எவ்வாறு ஏற்படுகின்றது என்பதனை உதாரணங்கள் மூலம் விளக்குக. (14 புள்ளிகள்)

2. அ) செயற்றிட்ட வளையம் (Project Cycle) ஒன்றின் பிரதான கட்டங்களையும் அவற்றில் இடம்பெறும் செயற்பாடுகளையும் வரைபடம் மூலம் விளக்குக. (06 புள்ளிகள்)

   ஆ) உலகவங்கி (World Bank) மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் (European Union) என்பவற்றின் செயற்றிட்ட வரைபட படிமுறையினை வரைந்து சுருக்கமாக விளக்குக. (06 புள்ளிகள்)

   இ) "திண்மக்கழிவகற்றல் பிரச்சினை" என்பதனை அடிப்படையாகக் கொண்டு பிரச்சினை மரம் (Problem tree) ஒன்றினை உருவாக்குவதுடன், அதனை தீர்ப்பதற்கான நோக்கற் பகுப்பாய்வு மரத்தினையும் (Objective Analysis Tree) தயாரிக்குக. (08 புள்ளிகள்)

3. அ) தர்க்க நெறிக்கட்டமைப்பு (Logical Framework Approach- LFA) அணுகுமுறையி
உள்ளடங்கும் விடயங்களை தாய அட்டவணை (Matrix) ஊடாக வரைந்து விளக்
(10 புள்ளிகள்)

ஆ) செயற்றிட்ட முன்மொழிவு ஒன்றில் உள்ளடங்க வேண்டிய விடயங்களை ஒழுங்கு
முறையில் விளக்குக. (10 புள்ளிகள்)

## பகுதி II

4. இலங்கையில் வறுமையை ஒழிக்கும் நோக்கில் முன்னெடுக்கப்பட்ட கிராமிய அபிவி
திட்டங்கள் பிரதேச அபிவிருத்திக்கு எந்தளவிற்கு பங்களித்துள்ளன என்பதனை ஆரா
(20 புள்ளிகள்)

5. கிறிஸ்ராலரின் மத்திய இடவமைவுக் கோட்பாடு (Central Place Theory) பிர
அபிவிருத்தித் திட்டமிடலுக்கு எந்தளவிற்குப் பொருத்தப்பாடுடையது என்பதனை ஆரா
(20 புள்ளிகள்)

6. இலங்கையில் பிரதேசத் திட்டமிடலில் காணப்படுகின்ற பின்னடைவுகளை விளக்கி, இ
வினைத்திறனான முறையில் அபிவிருத்தியை மேற்கொள்ள எவ்வாறான நடவடிக்கைக
மேற்கொள்ளலாம் என்பது தொடர்பாக ஆராய்க. (20 புள்ளிகள்)

7. பின்வருவனவற்றுள் யாதாயினும் **இரண்டினிற்கு** விளக்கக் குறிப்புரை எழுதுக.
   - அ) பிரதேச அபிவிருத்தி திட்டமிடல் கற்கையின் அவசியம்
   - ஆ) மைய எல்லை மாதிரி (Core – Periphery Model)
   - இ) பிரதேச அபிவிருத்தித் திட்டமிடல் செயன்முறையில் கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்தல் என்பவற்றின் அவசியம்

(10x 2 =20 புள்ளி